**IN THE COURT OF THE LABOUR COURT, SALEM**

# CP . No.86/2019

**Deposition of PW1**

Name : M.அசோகன் Husband / Father's Name :

Village : Taluk :

Caste : Religion :

Age : Calling :

Deposition of witness for the Petitioner / Respondent solemnly affirmed by Thiru. M. Raju, Bench Clerk Grade-I of this court on 02.12.2022 in accordance with Provisions X of Evidence Act 1872.

**1 மற்றும் 2 ஆம் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணை**

நான் எதிர்மனுதாரர் போக்குவரத்து கழகத்தில் எப்போது ஓய்வு பெற்றேன் என்றால் 31.12.2015 ஆம் தேதி ஓய்வு பெற்றேன். ஓய்வு பெறும் போது அடிப்படை சம்பளம் எவ்வளவு என்றால் ரூ 14460/- , தர ஊதியம் ரூ 2450/- . நான் ஓய்வு பெறும் போது மேற்கண்ட அடிப்படை சம்பளம் மற்றும் தரஊதியத்திற்குண்டான 118 சதிவித அகவிலைப்படி அடிப்படையில் எனக்குண்டான ஓய்வூதியம் மற்றும் நிலுவை தொகைகளை பெற்று'கொண்டேன் என்றால் சரி. எனக்கு முன்கூட்டு தொகை மட்டும் காலதாமதமாக கொடுத்தார்க்ள் என்றால் சரி. காலதாமதமாக வழுங்கப்பட்ட முன்கூட்டு தொகைக்கு 27.06.2018 அன்று வட்டி தொகையாக ரூ 27924/- நிர்வாகத்தால் வழங்கப்பட்டது என்றால் சரி. இந்த கோரிக்கை மனுவின் மூலமாக எனது ஓய்வூதியம் 119 சதவிதம் அகவிலைப்படியிலிருந்து 139 சதவிதம் வரை வழங்க வேண்டும் என்று கோரியுள்ளேன் என்றால் சரி.

என்னை போல் ஒய்வூ பெற்ற பணியாளர்களுக்கு தமிழகம் முழுவதும் 118 சதவிதத்திற்கு மேல் அகவிலைப்படி அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. ஓய்வூதியம் தொடர்பான அரசாணை எண் 142 பிறப்பிக்கப்பட்ட விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த அரசாணை எண்ணின் பேரில் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் ரிட் மனுக்கள் நிலுவையில் உள்ள விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இம் மனுவில் எதிர்மனுதார் தாக்கல் செய்துள்ள எதிருரையில் மேற்படி வழக்கு விவரங்கள் பற்றி கூறப்பட்டுள்ளது என்பதை நான் பார்த்து தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். இம்மனுவில் கோரியுள்ள நிலுவை ஓய்வூதியம் தொடர்பாக முன் கோருரிமை இல்லை என்றால் சரியல்ல. 118 சதவிதம் அகவிலைப்படிக்கு மேல் ஓய்வூதியம் வழங்குவது தொடர்பாக மாண்புமிகு உயர்நீதிமன்றங்களி்ல் வழக்கு நிலுவையில் இருப்பதால் இந்த கோரிக்கை மனு மூலமாக எந்தவித பரிகாரமும் கோர இயலாது என்றால் சரியல்ல. எனவே என்னுடைய மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை - இல்லை</u>**

**Sd/-Tmt.S. Sumathy,**
**Presiding Officer,**
**Labour Court, Salem**